பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 05 2024 **FRIDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு ஐந்தாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் இறுதிகட்டத்தை எட்டியுள்ளது.

2. எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி, வாக்கு வங்கி அரசியலில் ஈடுபடுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

3. காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், தில்லியில் காற்று மாசு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

4. மதுபான கொள்கை முறைகேடு வழக்கில், அமலாக்கத்துறை கைது செய்ததை எதிர்த்து தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

5. தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashwini Ponnappa – Tanisha Crasto** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

மக்களவைக்கு ஐந்தாம் கட்டமாக வரும் 20ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 49 தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரம் இறுதிகட்டத்தை எட்டியுள்ளது

வரும் 25ஆம் தேதி 57 தொகுதிகளில் ஆறாம் கட்டமாகவும், ஜூன் 1ஆம் தேதி 57 தொகுதிகளில் 7வது மற்றும் இறுதிகட்டமாகவும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

7வது கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான காலஅவகாசம் இன்றுடன் நிறைவடைந்தது.

ஏழு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 57 தொகுதிகளில் 7வது கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

உத்தரபிரதேசம் மற்றும் பஞ்சாபில் தலா 13 தொகுதியிலும், மேற்குவங்கத்தில் 9, பீகாரில் 8, ஒடிசாவில் 6, ஹிமாச்சலப்பிரதேசத்தில் 4, ஜார்க்கண்ட்டில் 3, சண்டிகர் யூனியன் பிரதேசத்தில் ஒரு தொகுதியிலும் ஏழாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

மொத்தம் ஏழு கட்டங்களில் பதிவான வாக்குகள் ஜூன் 4ஆம் தேதி எண்ணப்படவுள்ளன.

**>>>>><<<<<**

சமாஜ்வாதி மற்றும் காங்கிரஸ் கூட்டணி கட்சிகள், வாக்கு வங்கி அரசியலில் ஈடுபடுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், **Barabanki** என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து **Fatehpur** மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர், ஏற்கனவே உத்தரபிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சி ஆட்சியில் இருந்தபோது, குற்றங்கள் அதிகரித்ததுடன், ஊழலும் அதிக அளவில் இருந்ததாக திரு. நரேந்திர மோடி குறை கூறினார்.

உத்தரபிரதேச மாநிலம், ரேபரேலியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தி, இந்த தொகுதி தமக்கு மிகவும் நெருக்கமானது என்றும், காங்கிரஸ் கட்சியின் வேர்கள் இந்த தொகுதியுடன் பிணைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இருபது ஆண்டுகளாக இந்த தொகுதியின் மக்களவை உறுப்பினராக தாம் பணியாற்றியது, வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு என்று அவர் குறிப்பிட்டார்.

ரேபரேலி உட்பட நாடுமுழுவதும் பெரும்பான்மையான தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெறும் என்றும் திருமதி சோனியா காந்தி நம்பிக்கை தெரிவித்தார்.

இதே கூட்டத்தில் பேசிய சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணிக்கு கிடைத்துள்ள வரவேற்பை கண்டு, பிஜேபி பதற்றத்தில் உள்ளதாக கூறினார்.

ஜார்க்கண்ட் தலைநகர், ராஞ்சியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷா, ஊழல்வாதிகளை தோற்கடித்து நேர்மையான வெளிப்படைத்தன்மை கொண்ட அரசை மீண்டும் தேர்ந்தெடுக்க மக்கள் தயாராகிவிட்டதாக கூறினார்.

ராஞ்சியில் தாம் மேற்கொண்ட பிரச்சார பேரணியின் போது திரண்டிருந்த மக்களே அதற்கு சாட்சி என்று அவர் குறிப்பிட்டார்.

அமேதி மற்றும் ரேபரேலி மக்கள், காந்தி குடும்பத்தை தலைவர்களாக கருதி தேர்வு செய்த நிலையில், அந்த தொகுதி மக்கள் அவர்களை ஏற்கப்போவதில்லை என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

இதற்கிடையே, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திருமதி. நிர்மலா சீதாராமன், ஆம் ஆத்மி நாடாளுமன்ற உறுப்பினர் சுவாதி மாலிவால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் மௌனத்தை கடைபிடிப்பதாக குறை கூறினார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக திரு. கெஜ்ரிவால் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முதலமைச்சர் இல்லத்திலேயே பெண் நாடாளுமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாகவும், அந்த கட்சியின் பெரும்பாலான தலைவர்கள், மகளிருக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் சிக்கியிருப்பதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி. மம்தா பானர்ஜியை தனிப்பட்ட முறையில் விமர்சித்ததற்காக பிஜேபி வேட்பாளர் திரு. அபிஜித் கங்கோபாத்யாய-வுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளுக்கு எதிராக அவர் செயல்பட்டதாக தெரிவித்துள்ள தேர்தல் ஆணையம் அதுதுகுறித்து அவர் விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

தில்லி காற்று மாசு தொடர்பாக கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள், எந்தப் பலனையும் அளிக்கவில்லை என்று காங்கிரஸ் கட்சி குறை கூறியுள்ளது.

தில்லியில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. ஜெய்ராம் ரமேஷ், இந்த தேர்தலில் தில்லி சுற்றுச்சூழல் பிரச்சினை மிக முக்கியப் பங்காற்றும் என்று கூறினார்.

காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், தில்லியில் காற்று மாசு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

இந்த தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி, பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறும் என்றும் திரு. ஜெய்ராம் ரமேஷ் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில், அமலாக்கத்துறையால் தாம் கைது செய்யப்பட்டதை எதிர்த்து, தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பை உச்சநீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்துள்ளது.

இந்த வழக்கில் திரு. கெஜ்ரிவால் வழக்கமான ஜாமின் கோரி, விசாரணை நீதிமன்றத்தை அணுகுவதற்கு நீதிபதிகள் திரு. சஞ்சீவ் கண்ணா – திரு. தீபாங்கர் தத்தா ஆகியோரைக் கொண்ட அமர்வு அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக கடந்த 10ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 1ஆம் தேதி வரை திரு. அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு நீதிபதிகள் இடைக்கால ஜாமின் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

>>>>><<<<<

கொடைக்கானலில் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி தொடங்கியுள்ளது.

இதில், லட்சக்கணக்கான மலர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

கோவாவில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழாவுக்கான அதிகாரப்பூர்வ விளம்பர போஸ்டரை தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு. **Sanjay Jaju** வெளியிட்டார்.

பிரான்ஸில் நடைபெறும் 77வது **Cannes** திரைப்பட விழாவில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், தயாரிப்பாளர்கள் **Ashok Amritraj, Richie Mehta,** பாடகர் **Shaan,** நடிகர்கள் ராஜ்பால் யாதவ், **Bobby Bedi** உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**Cannes** திரைப்பட விழாவில் இந்தியா முதல்முறையாக **Bharat Parv** என்ற கொண்டாட்டங்களை நடத்துகிறது.

இந்திய சினிமாவுடன் நாட்டின் வளமான கலாச்சாரம், உணவு வகைகள் மற்றும் கைவினைப் பொருட்களை பிரபலப்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

பங்களாதேஷ் பிரதமர் திரு. ஷேக் ஹசீனா, அந்நாட்டிற்கு மீண்டும் திரும்பியதன் 44வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்பட்டது.

அவரது தந்தை ஷேக் முஜிபூர் ரஹ்மான் உள்ளிட்ட குடும்பத்தினர் கடந்த 1975 ஆண்டு கொல்லப்பட்ட பின்னர், திருமதி. ஷேக் ஹசீனாவும் அவருடைய சகோதரி திருமதி. **Sheik Rehana**–வும் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர்.

அவர்கள், மீண்டும் தில்லியிலிருந்து 1981ஆம் ஆண்டு மே மாதம், 17ஆம் தேதி பங்களாதேஷ் திரும்பிய நாள், ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி திருமதி. ஷேக் ஹசீனாவுக்கு, அவாமி லீக் கட்சியின் தலைவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

**>>>>><<<<<**

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashwini Ponnappa – Tanisha Crasto** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-15, 21-23, 21-19 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Lee Yu Lim – Shin Seung Chan** இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-7, 21-14 என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Junaidi Arif – Roy King Yap** இணையை வென்றது.

**>>>>><<<<<**

ஜெர்மனியில் நடைபெற்ற சர்வதேச சைக்கிள் போட்டியில் இந்தியாவின் **Esow Alben** தங்கப்பதக்கத்தையும், **Ronaldo Singh** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

**>>>>><<<<<**

**Elorda** கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியா நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**>>>>><<<<<**

**Sharjah** மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில் இந்தியாவின் **Arjun Erigaisi** வெற்றி பெற்றார்.

**>>>>><<<<<**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை இன்று லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள ஆட்டத்தில் டாஸ் வென்ற மும்பை அணி பந்துவீச தீர்மானித்துள்ளது.

**>>>>>END<<<<<**